**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**

**ந.க..எண்.3135/ஆ5/2025, நாள்.28 /07/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – 2025–2026 மன்றச் செயல்பாடுகள் – அரசு பள்ளியில் பயிலும் 6 முதல் 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கான சிறார் திரைப்படம் மன்றம் மற்றும் சிறார் திரைப்படம் திரையிடுதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – வழங்குதல் – சார்பாக

பார்வை
1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.034785/ எம்/இ1/2025, நாள். 30.06.2025
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.034785/ எம்1/இ1/2025, நாள். 24.07.2025

.....

2025–2026ஆம் ஆண்டிற்கான அரசு பள்ளிகளில் 6 முதல் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான சிறார் திரைப்படம் மன்றம் மற்றும் சிறார் திரைப்படம் திரையிடுதலுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் பார்வை 2ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் வழங்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் சிறார் திரைப்படம் மன்றம் மற்றும் சிறார் திரைப்படம் திரையிடுதலுக்கான பெறப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இத்துடன் இணைத்து அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அனுப்பப்படுகிறது.

<u>2025–2026 ஆம் கல்வியாண்டின் முதல் சிறார் திரைப்படம்</u>

கடந்த கல்வியாண்டில் மாநில அளவிலான சிறார் திரைப்பட போட்டியில் பங்கேற்ற மாணவர்கள் தயார் செய்த குறும்படங்கள் "TOP–10 (2024 – 2025)" என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டு, 2025–2026ஆம் கல்வியாண்டின் முதல் சிறார் திரைப்படமாக ஜூலை மாதம் திரையிட திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாணவர்களின் படைப்புகளை திரையிடும்போது அவர்களின் படைப்புகள் அங்கீகரிக்கப்படுவதுடன், அனைத்து மாணவர்களும் இச்செயல்பாட்டில் பங்குபெற ஊக்குவிக்கப்படுவர்.

EMIS வாயிலாக வழங்கப்படும் இத்திரைப்படம் மாணவர்களுக்கென பிரத்யேகமாக தொகுக்கப்பட்டுள்ளது. எனவே EMIS, தளத்திலிருந்து மட்டுமே திரைப்படத்தினை திரையிடுதல் / பதிவிறக்கம் செய்தல் வேண்டும். பிற வலைதளங்களிலிருந்து இத்திரைப்படம் திரையிடுதல் / பதிவிறக்கம்செய்தல் கூடாது. EMIS இணையவழியே தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கான உள்நுழைவு அடையாளங்களை பயன்படுத்தி, திரைப்படத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முன்கூட்டியே, பதிவிறக்கம் செய்து, பென்–டிரைவ் அல்லது DVDல் சேமித்து வைத்து Hi – tech lab / TV / Projector / Smart Board வாயிலாக ஒலிபெருக்கி (Speaker) வசதியுடன் மாணவர்களுக்கு திரையிட வேண்டும். இவ்வசதி இல்லாத பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

சிறார் திரைப்பட மன்றம் சார்ந்த செயல்பாடுகள் அனைத்தும், பிற மன்றச் செயல்பாடுகளைப் போல மகிழ் முற்றம் மாணவர் குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படுதல் வேண்டும். இவ்வாறு மாணவர் குழுக்களாக செயல்பாடுகளில் ஈடுபடும்போது, மாணவர்களிடையே ஆரோக்கியமான போட்டி சூழல் உருவாக்கப்பட்டு, அனைத்து மாணவர்களும் அவரவர் குழு வெற்றி பெற தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வாய்ப்பு உருவாகும்.

வட்டார அளவில் வட்டாரக் கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பள்ளிகளில் சிறார் திரைப்படம் திரையிடப்படுதலை உறுதி செய்தல் வேண்டும். மேலும், ஒவ்வொரு முறையும் சிறார் திரைப்படம் திரையிடப்படும் போது, பள்ளிப்பார்வை மேற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளுதல் வேண்டும்.

மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர், பள்ளி துணை ஆய்வாளர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் சிறார் திரைப்படம் திரையிடப்படுதலை உறுதி செய்தல் வேண்டும். மேலும், ஒவ்வொரு முறையும் சிறார் திரைப்படம் திரையிடப்படும் போது, பள்ளிப்பார்வை மேற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளுதல் வேண்டும்.

பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை கவனமாக பின்பற்றி பள்ளிகளில் ஒவ்வொரு மாதமும் பரிந்துரைக்கப்படும் திரைப்படத்தினை மாணவர்களுக்கு திரையிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. பார்வை 2ன் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்
2. பள்ளிகளில் சிறார் திரைப்படம் திரையிடுதல் சார்ந்த வழிகாட்டு நெறிமுறைகள்
3. சிறார் திரைப்படம் திரையிடல் அமர்விற்கான நிகழ்ச்சி நிரல்
4. சிறார் திரைப்படம் திரையிடப்பட்ட பின்னர் பொறுப்பாசிரியர் மாணவர்களுக்கு சிறார் திரைப்பட மன்ற செயல்பாடுகள் மகிழ்முற்றம் மாணவர் குழுக்கள் வாயிலாக மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள்
5. ஜுலை 2025 மாதத்திற்கான சிறார் திரைப்படத்தின் சுருக்கம்

28.07.25

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள்,
   அனைத்து அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

நகல்–

1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,, காந்திநகர்,
   வேலூர் மாவட்டம். (இவ்லுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
   வேலூர் மாவட்டம். (மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக)
4. பள்ளித் துணை ஆய்வாளர்கள்,
   (முதன்மைக் கல்வி அலுவலகம் / மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை)
   வேலூர் மாவட்டம் (உரிய அலுவலர் மூலமாக)
5. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
   உதவி திட்ட அலுவலகம், காந்திநகர்
   வேலூர் மாவட்டம். (உதவி திட்ட அலுவலர் மூலமாக)
6. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், வேலூர் மாவட்டம்.
7. ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.